**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.46/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கோவிந்தராஜ் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of October 2024.

08.10.2024

(எதிரிகள் 1 மற்றும் 3 ஆஜர், 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 01.09.2023 ம் தேதி குமாரகுறிச்சிக்கு நாடகம் பார்ப்பதற்கு நான், எனது மாமா சுரேஷ், மாமா பூமிநாதன் ஆகியோருடன் சென்றிருந்தேன். இரவு 10.00 மணியளவில் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும் போது அங்கு சண்டை நடைபெற்றது பின்பு இரவு 11, 12 மணியளவில் வீட்டிற்கு நான் கிளம்பி குமாரகுறிச்சி பேருந்து நிறுத்ததில் நின்றுகொண்டிருந்த போது 1ம் எதிரி ரமேஷ்பாண்டியன், 4ம் எதிரி செந்தில்குமார், 2ம் எதிரி அருண் மற்றும் 3ம் எதிரி பூவந்திகுமார் ஆகியோர் சேர்ந்து என்னை செருப்பாலும், கம்பாலும் அடித்துவிட்டார்கள். அதில் எனது இடது கையில் உள்ள மோதிரவிரல் உடைந்துவிட்டது. தற்போது வரை அந்த விரல் என்னால் மடக்க இயலவில்லை.

2) நான் அந்த இடத்தில் மயக்கமாகி இருந்தேன். என்னை எதற்காக அடித்தார்கள் என்று தெரியாது. நாடகம் பார்த்துவிட்டு வந்த நபர்கள் என்னை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். முதுகுளத்தூர் போலிசார் என்னை

விசாரித்து புகார் மனு வாங்கினார்கள். அதில் நான் படித்து பார்த்து கேட்டு கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).**

**3)** நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் ஒரு வாரமும், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் சுமார் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) குமாரக்குறிச்சியில் நாடகம் நடந்து கொண்டிருந்தபோது இளஞ்செம்பூர் காவல் நிலைய போலிசார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரிதான். புகார் மனுவில் நானும் சாட்சிகள் பூமிநாதன் மற்றும் சுரேஷ் ஆகியோர் இருசக்கர வாகனத்தின் மீது அமர்ந்து நாடகத்தை பார்க்கும்போது இந்த வழக்கின் 1ம் எதிரி நாடகம் மறைக்கிறது கீழே அமருங்கள் என்று கூறும்போது நாங்கள் மூவரும் 1ம் எதிரியுடன் சண்டையிட்டு காயத்தை ஏற்படுத்தி 1ம் எதிரியின் டாலருடன் கூடிய 2 பவுன் தங்க செயினை அறுத்து 1ம் எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) மேற்படி சம்பவம் குறித்து 1ம் எதிரி இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.50/2023 ஆக பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC 196/2023 ஆக வழக்கு இன்று வரை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும் சாட்சிகள் பூமிநாதன் மற்றும் சுரேஷ் ஆகியோர் குற்றவாளியாக உள்ளோம் என்றால் சரிதான். அந்த இன்று விசாரணைக்கு வந்துள்ளது என்றால் சரிதான். நான் எனது புகார் மனுவில் வழிபோக்கரின் இருசக்கர வாகனத்தில் வந்து குமாரகுறிச்சி பேருந்து நிறுத்ததில் நின்றுகொண்டிருந்தேன் என்றால் இல்லை.

3) குமாரக்குறிச்சியில் சம்பவம் நடந்தபோது அங்குள்ள காவல் அதிகாரியிடம் வாய்மொழியாக புகார் அளிக்கப்பட்டது. அவர் காயத்திற்கு சிகிச்சை எடுத்துவிட்டு காலையில் வந்து புகார் கொடுங்கள் என்று சொன்னபோது அதை அருகில் இருந்து கவனித்துவிட்டு இந்த வழக்கின் சாட்சிகள் நாங்களே காயங்களை ஏற்படுத்திக்கெண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் என்னை முகம் தெரியாது நான்கு நபர்கள் தாக்கினார்கள் என்று கூறினேனா என்றால் இல்லை.

4) ஆதனக்குறிச்சியை சேர்ந்த பரிமளம் என்பவர் சடையனேரியை சேர்ந்த செந்தில் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்து அவர்கள் இருவரும் தற்போது பிரிந்து வாழ்வது வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு பரிமளம் சொல்லிதான் எதிரிகளின் பெயர்கள் தெரிய வந்தது என்றால் சரியல்ல. எதிரிகள் வந்து குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்ததில் என்னை தாக்கவில்லை என்றாலும் அந்த சம்பவயிடத்திற்கு எதிரிகள் நான்கு பேரும் வரவில்லை என்றாலும் 1ம் எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக நாங்களே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) யார் யார் எந்த எந்த இடத்தில் என்னை அடித்தார்கள் என்று புகார் மனுவிலும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. யார் யார் எவ்வாறு என்னை அடித்தார்கள் என்று நான் யாரிடமும் கூறவில்லை என்றால் எனது மனைவி, எனது அம்மாவிடம் கூறியுள்ளேன். போலிசார் என்னை விசாரித்த பின்பு நான் எனது மனைவி, எனது அம்மாவிடம் கூறினேன். நான் குமாரக்குறிச்சி பேருந்து நிறுத்ததிற்கு யாருடன் வந்தேன் என்றால் இரவு நேரம் என்பதால் நான் அவரது பெயரை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை ஆனால் அவர் சமத்துவபுரத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியும்.

6) நான், சுரேஷ், பூமிநாதன் ஆகியோர் ஒன்றாகதான் வந்தோம் என்றால் சரியல்ல தனித்தனியாக தான் சென்றோம். இந்த வழக்கிற்காக நான் மட்டும் தான் வந்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.